பதிவுபெற்ற பத்திரிகை

ஸ்தாபிதம் (1889) ஆம் ஆண்டு

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரிகை கிரயம்.**

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: வருஷம் 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩எ. } யாழ்ப்பாணம்:—ருரோதன ஹூ ஐப்பசி ௴ ௧௭௨; (1925 நவம்பர் 2) திங்கட்கிழமை. } இலக்கம்—௩௪


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிழு லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது ளாங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்'

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.

## இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் தெ. 2-ம் தெ. வெள்ளியிலும் மிச்சம் அப்புரவாக வேலைமுடித்த முரசுகுத்தி கெங்காதரக்கொடி கைகோர்வை, முகப்புக்கொடி, காஞ்சி அரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு, வகைகளும் கட்டிய கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செசப்பு கம்மல் தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டுபருத்திமுதலிய ஜவுளித் தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லீஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தோ. வெ. சென்னிசெட்டி &சன்ஸ்
சராப். ஜவுளி வியாபாரம்
குகை, சேலம்,
தென்-இந்தியா.

(H. 41.)

ESTABLISHED, 1909

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
### Kairul Muslimeen Medical Hall
### PORTONOVO (*South Arcot Dt; India.*)

இந்த விளம்பரம்முழுதும் தாங்களும் வாசித்து தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசிக்கக்காண்பியுங்கள். குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வது போல் வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மயங்கிவிடாதீர்கள்.

கண்பிற்குகந்த அன்பர்காள்! நமது கம்பெனி ஸ்தாபித்த 1909-வது வருடமுதல் நாளது தேதிவரையில் கீழ் காணப்பட்ட லேகியத்தைச் செய்து இந்தியா, பர்மா, சிலோன், மலாய் முதலிய தேசவாசர்களுக் கனுப்பி ஒவ்வொரு மஹான்களாலும் பிரபுக்களாலும் பிரயோகித்து நோயற்ற வாழ்வென்னும் பாக்கியத்தை குறைவற்ற செல்வமாயடைந்து ஒவ்வொரு சனவான்களாலும் நமக்கு யோக்கிய நற்சாக்ஷிகளும் அனந்த பரிசுகளும் பெற்றுவருவது நேயர்கள் அறிந்த விஷயமேயாம். தற்கால கிலைமைக்கேற்றுப்போல் அனந்த பொய்வசனங்களை விடுத்து புதிது புதிதாக இத்தகைப்போன்ற குருவிலேகிய மென ஓர் நாமஞ் சூட்டி பத்திரிகை நோட்டீஸ் மூலமாய் வெளியிட்டிருக்கும் போலி மருந்துகளை நம்பிக் கையாண்டு பொருள் நஷ்டமும், மனக்கஷ்டமுங் கொள்ளாது நீடியகாலத்து அனுபவ முத்திபெற்ற உண்மையான மருந்துகளை ஆசமுடைய யோகவான்கள் உணர்ந்து தருவித்து அருந்துவீர்களாக.

இதுவே அசல் பாகமுள்ளது! ஒருவருமிகழ்ந்து பேசாதது!!

உத்திரவாதமுள்ள

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இச்சிறந்த இராஜ ஔஷத லேகியமானது முற்காலத்து மன்னர்களால் உபயோகித்துப் பிரசன்னமாய்ப் புகழ்ப் பெற்று வீரியசக்திக் குறைபாது இல்லறத்தின் இன்ப வாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழிவாழும் பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், சோர்வில்லாத தைரியத்தை உண்டாக்கக் கூடியதுமான ஒப்பற்ற ஓர் புருஷ சஞ்சீவியாகின்றது. இச்சிறந்த அபூர்வ குண லேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனுக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கிறோம். மற்ற விவரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

மேற்படி லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாதபித்த சிலேத்ம மிகுதிக் குறைவால் ஏற்படும் இரத்தக் குறைவு ஏழுவகை தாதுக்களின் க்ஷீணம் அஸ்தி, வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர் பெருத்தல் ஆகிய நோய்களையும் நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாது நஷ்டம், சித்தராபங்கம், Spermatorrhea, தேகமெலிவு, சதா இடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஒடுக்கிரியுக பலவித வாய்வுகள், நெஞ்சுவலி Nervous-diseases ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி இரத்தத்தைச் சுத்தி செய்து புதிய மேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது.

40 நாள் சாப்பிடும் பெரிய டப்பி 1-க்கு விலை ரூ. 8—0—0
20 நாள் சாப்பிடும் சிறிய டப்பி 1-க்கு விலை ரூ. 4—0—0

வி. பி. தபால் சார்ஜு பிரத்தியேகம் முற்பணமனுப்பினால் வி-பி செலவு இனமாயனுப்பப்படும். பினாங்கு, சிங்கப்பூர், மலாக்கா, கோலாலம்பூர், கிள்ளான் முதலிய Straits Settlements வாசர்களும் Federated Malay States வாசர்களும், மருந்தின் கிரயமும் தபால் செலவு ரூ. 2-ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். மேற்படி ஊர்களுக்கு நிண்ணமாய் வி. பி, யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமான து சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது நெய் குருவியன சத்தால் செய்யப்படவில்லை யென்றாவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லை யென்றாவது அல்லது சில போலியர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை சபதங்கள் கூறிக்கொண்டு பத்திரிகை வாயிலாய் வெளிவந்த இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குண முண்டென்றாவது அல்லது இந்த அபூர்வ குண லேகியத்தைச் செய்து காட்டினலாவது, கடவுளுக்குப் பொதுவாய் சத்தியமாய் ரூபிப்பவர்களுக்கு அவர்களால் கூறிய சபதங்களின் தொகையும், நமது கம்பெனியால் ரூ 1000 இனாமாயும் சேர்த்துக் கொடுக்கப்படும். அப்படியே ரூபித்தும் இனாமுடைய பணத்தைக்கொடுக்கத்தவறினால் கோர்ட்டு மூலமாகவசூல் செய்துக்கொள்ளலாம். ஆர்டர்செய்யும் நேயர்கள் இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டெழுதவும்.

என் மேல்விலாசம்:—

*Tel. Address:*— **Kader Brothers** PORTO-NOVO

மெஸ்ஸர்ஸ ஏ. எஸ். எம். ஏ. காதர் பிறதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை,
தென்னாற்காடு ஜில்லா.

(Y. 38.)

## இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், தெ. 1-ம், தெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் துப்புரவாக வேலை செய்த முரசுகுத்தி கெங்காதரக் கொடி, கைக்கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால் தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம், மோதிரம், புதுச சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சீமை வயிரக்கல்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

நா. பிளே செட்டி அண் கோ.,
சருப் ஜவுளி வியாபாரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 39)

## சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

குளிர் (தலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனால் முற்றக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரிட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ருபா 1 சதம் 50. இம்மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது. (Y. 47.)

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாலு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம்' சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைருத்தலுக்கு ரூபா ௧0. கால் ருத்தலுக்கு ரூபா ௫ தாபற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாதபடியால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டுக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

வீ. ஸாமி. அய்யங்காருடைய

## அறைக்கீரைவிதைத் தைலம்.



பித்த மேகசீரானது சிரசுக்கேற அதனாற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்தலருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடு கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், கொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும் இந்த நோட்டீஸில் காணப்படாத கழுத்திற்குமேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப் படுத்தும், மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயக்காய்தேய்த்து ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும் 8 நாள்வரையிலும் சுக்கம் மாறுது அன்று பகலில்மாத்திரம் தூங்கக் கூடாது. 10 பலங்கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0. 'பாக்கிங்போஸ்டேஜ் சார்ஜு பிரத்தியேகம்'

'விற்பனைக்கு கமிஷன் ஏஜண்டுகள் தேவை. விபரம் எழுதிக்கேட்கவும்.'

ஜனபகத்தம்மாள்,
8 நம். பிராடீஸ் ரோட்
மைலாப்பூர், சென்னை,

(Q. 67.)

## ஒற்றுமை.

சித்திரப் படங்களுடனும் விநோதப் படங்களுடனும் தமிழ்மொழி வளர்ச்சி கருதி வரும் மாதப்பத்திரிகை 'ஒற்றுமை'க்கு 6-வது வருடம் நவம்பர்மாதம் பிறக்கப்போகிறது. மாதிரிப் பிரதி இனும் வருடசந்தா உள்நாடு ரூபா 1. வெளிநாடு ரூபா 1¼. ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன். 'ஒற்றுமை' ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்

(H. 43.)

## சமையல் சௌக்கியம்.

இந்தியாவிலும் வெளிநாட்டிலும் புகழ்பெற்று விளங்கும்.

## ருக்குமணி குக்கர்.

சமையல் அடுக்கை உபயோகிப்பவர்களுக்கே உண்டு முதல் 8 பேர்களுக்கு ஒரு மணிநேரத்தில் சொற்ப செலவில், தொந்தரவேயில்லாமல் சாதம் 5 கறிவகைகள் சமைக்கும். தனித்தவர்களுக்கும் குடும்பிகளுக்கும் வீட்டிலும் பிரயாணத்திலும் உபயோகம்.

1, 2, 4, 6, 8, பேருக்குரியது ரூபா 13, 18, 22, 27, 33-க் கிடைக்கும். தபாற்கூலி வேறு. விபரப் புத்தகம் இனாம் ஏஜண்டுகள் தேவை. உடனே எழுதுக.

ருக்குமணி குக்கர் கம்பெனி,
இராயப்புரம் (2) சென்னபட்டினம்.

(Y. 45)

## அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ருத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

## "சேலம் பனியன்கள்."

உறுதியானது விலைசரசம்.

நாட்பட உழைக்கக்கூடியது,

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ரூயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்.
S. இந்தியா.

(H 40)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன வரு
ஐப்பசி மீ ௪௨ திங்கட்கிழமை

## பள்ளிக்கூடத் தோட்டங்கள்.

இப்பொழுது வெளிவந்திருக்கும் இலங்கையின் வித்தியாபரிபாலன அறிக்கைப்பத்திரத்திலே, பள்ளிக்கூடப் பிள்ளைகள் கல்வியோடு கமத்தொழிலையும் பயின்றுகொள்வதற்காக வித்தியாசாலைகட்கு அணித்தாக அமைக்கப்பட்டிருக்கும் தோட்டங்களைப் பற்றிக் கூறுமிடத்து, இவ்விதமான பள்ளிக்கூடத் தோட்டங்கள் வருடந்தோறும் தொகையில் அதிகரித்து வருகின்றன வென்றும், வித்தியாசாலை ஆசிரியர்களுட் பலர் இப்படியான தோட்ட விஷயத்திற் பெரிதும் சிரமம் பூண்டு உழைத்து வருகின்றார்க ளென்றும், கேகாலைப்பகுதியிலும் வடமேன்மாகாணத்திலும் சிறந்த பள்ளிக்கூடத் தோட்டங்கள் காணப்படுகின்றனவென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. வடமாகாணத்திலே எடுத்துச் சொல்லத்தக்க பள்ளிக்கூடத்தோட்டம் யாதுமில்லையென்றும் மேற்படி அறிக்கைப் பத்திரவாயிலாக அறியக்கிடக்கின்றது.

வித்தியாவிருத்திவிஷயத்தளவிலெனிலோ வடமாகாணம் மேன்மாகாணத்தோடு சமத்துவம் வகித்திருக்கின்றது. இக்காலத்தில் யாதும் முயற்சிக்கு வழிகாட்டேனு சக்தியற்ற கல்வியைப் பயில்வதிலேயே அதிக பொருளையும் கோத்தையும் சிரமத்தையும் அர்ப்பணஞ்செய்து ஈற்றில் பிழைப்பிற்கு வழியின்றித் தெருவழியே திண்டாடித்திரியும் நம்மவர்கள் யாதும் பயன்றரக்கூடிய கமத்தொழிற் பயிற்சியளவிற் பெரிதும் அலட்சியமாக விருத்தற்குக் காரணம் யாதெனப் புலப்படவில்லை.

இப்பொழுது உடை உணவு முதலாம் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்கள் எவற்றின் பொருட்டும் அந்நியர் கையையே எதிர்பார்த்த வண்ணம் நாங்களிருப்ப, எங்கள் முதாதையர் முற்காலத்திலே இந்த வடமாகாணத்திலேயே தங்களுக்கு வேண்டிய உணவு உடை முதலாம் சகல இன்றியமையாப் பொருள்களையும் தாங்களே ஆக்கி அநுபவித்து முட்டின்றி வாழ்ந்துவந்தார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது. முற்காலத்தில் யாழ்ப்பாணம் கமத்தொழிலுக்கு உரிய பூமியாகவும் யாழ்ப்பாணத்தவர் கமத்தொழிலையே பெரிதுஞ் செய்து வாழ்பவராயுமிருந்தனர் வஸ்திரங்களும் இங்கேயே ஆக்கப்பட்டன.

பிற்காலத்தில் இங்குள்ளார் ஆங்கிலம் படித்து உத்தியோகம் பார்க்கத் தொடங்கி, உள்ளூரில் உத்தியோகத்திற்கு இடமில்லாதொழிய, சிங்கப்பூர் முதலாம் அந்நிய தேசங்களுக்குப் புறப்பட்டு அங்கே உத்தியோகம் பார்த்துப் பொருளீட்டத் தொடங்கினர். இப்படிச் செய்தமையினால் ஆரம்பத்தில் இங்குள்ளார் பொருளையீட்டினர். ஆனாற் காலகதியில் எல்லாரும் ஆங்கிலம் படிக்கத் தொடங்கியமையினால் உத்தியோகம் உள்ளூரிலும் வெளியூரிலும் சிங்கப்பூர் முதலிய இடங்களிலும் அகப்படாமல் இடர்ப்படலாயினர். எங்கள்புராதன ஒறுப்பனவான உடைநடைபாவனைகளையும் சொந்த உணவுகளையும் கைவிட்டு அந்நிய உடை நடை பாவனைகளையும் அந்நியருக்குரிய உணவையும் முறையே உடுக்கவும் உண்ணவும் தொடங்கினர்; கமத்தொழில் செய்தல் கௌரவக் குறைவென மதித்து அதனைச் செய்யாதொழிந்தனர். இங்குள்ள குடிசனமும் காலந்தோறும் பெருகி வரலாயின. இப்பொழுது அந்நிய நாட்டுப் பொருள்களின்றி நாங்கள் ஒருநிமிஷ நேரந்தானும் உயிர்வாழ்வது முடியாமலிருக்கின்றது. உற்றுணருங்கால் எங்களை இத்தாரித்திரிய நிலைமைக்கு இழுத்துவிட்டது இப்பொழுது ஊட்டப்படும் கல்விமுறையேயா மென்பது இனிது விளங்கக்கிடக்கின்றது.

யாழ்ப்பாணத்திலும் வன்னிப்பகுதியிலும் ஆக்கக்கூடிய உணவுப்பொருள்களை அங்ஙனம் ஆக்கிக்கொள்ளாது நாங்கள் அவற்றின் பொருட்டு இங்குள்ள பணத்தையெல்லாம் அந்நிய நாட்டேக்குக் கணந்தோறும் வாரியிறைத்த வண்ணமாகவே யிருக்கின்றோம். இப்படியின்னுஞ் சிலகால மிருப்போமானால் ஈற்றில் எங்கள் கதி என்னவாய் முடியுமோ அறியேம். வருவாய்க்கு வழிகாட்ட முடியாமலிருக்கும் இக்காலத்துக் கல்வியின் பொருட்டுப் பெருந்தொகைப்பணம் செலவிடும் அரசினர், எங்களை ஈடேறச்செய்ய வேண்டுமோகில், கமத்தொழிலை விருத்தி செய்தற்கான வழிகளை எங்கள் பிள்ளைகட்குப் பள்ளிக்கூடத்திற் கல்விபயிலும்போதே பயிற்றிவிடுதல்வேண்டும். அரசினர் இதனை ஒருவாறு உணர்ந்து இப்பொழுது அப்படிச் செய்தற்கு ஆயத்தமாகவிருக் கின்றார்கள். ஆனால் வித்தியாசாலை அதிகாரிகளும் ஊரவர்களும் பராமுகமாகவே இப்பொழுதும் இருக்கின்றனர்.

பள்ளிக்கூடச் சிறுவர்கள் நாள்தோறும் தங்கள் படிப்பு முடித்தபின்னர் பின்னேர வேளைகளில் பந்தும் பந்தடிக்குந் தடியும் எடுத்துக்கொண்டு முற்றவெளி முதலாம் இடங்களுக்கு விளையாடப் போதற்குப் பதிலாக, தேகாப்பியாசத்தின் பொருட்டும் கமத்தொழில் பழகுதற் பொருட்டும் சிரமத்தோடு வேலைசெய்யத்தக்க தோட்டங்களைப்பள்ளிக்கூடத்திற்கணித்தாக அதிகாரிகள் அமைத்துவிடல்வேண்டுமென இப்பத்திரிகையில் எத்தனையோமுறை கூறியுள்ளோம். அக்கூற்று, காட்டேக்கெறித்த நிலாப்போற் பயனற்றதாகப் போய்விட்டது.

உத்தியோகப் பஞ்சம் நேர்ந்துள்ள இக்காலத்தில் நம்மவர் பள்ளிக்கூடங்கள்தோறும் அவற்றிற்கணித்தாகப் பள்ளிக்கூடத் தோட்டங்களை அமைத்துவிடின்எல்லோருங் கமஞ் செய்யப் பயின்றுகொள்வார்கள். கமத்தொழிலிலே மிக்க ஆர்வம் பிறக்கும். ஆரம்பத்தில் இப்பள்ளிக்கூடத் தோட்டங்களில் எங்கள் சிறுவர்கள் கமத்தொழில் பயின்றுகொள்வரேல், பின்னர் திருநெல்வேலியிலுள்ள கமத்தொழிற் பள்ளிக்கூடத்திற்குச் சென்று கமத்தொழிற் கல்வியைப் படித்தலும் இலகுவாகும். எங்கள் அரசினரும் பாடசாலைத் தோட்டம் ஆவசியகம் பாடசாலைகள் தோறும் இருத்தல்வேண்டுமென்று வற்புறுத்திநிற்பரேல் பாடசாலை அதிகாரிகள் தவறாமல் அப்படிப்பட்ட தோட்டத்தை அமைத்துவிடுவோர்கள்.

கோப்பாயிலுள்ள ஆசிரியர் கல்லூரியில் அங்குக் கற்பவர்கள் பின்னேரத்திலே கமத்தொழில் செய்தற்கான ஒழுங்குகள் மேற்படி கல்லூரி அதிபரால் செய்யப்பட்டிருக்கின்றன. பின்னேரத்தில் வீண்விளையாட்டின்றி ஆசிரிய மாணவர் தோட்டஞ் செய்வதை நேரிற்சென்று பார்க்கும்போது உண்மையான தேசாபிமானிக்குப் பேரானந்தத்தைத் தரும். இவர்கள் தாம் ஆசிரியராக வரும்போது தங்கள் வித்தியாசாலைகளிலும் இப்படிப்பட்ட தோட்டங்களை அமைப்பரென்பது திண்ணம். கோப்பாய் ஆசிரிய கல்லூரியில் நிகழ்வதை ஏனைய கல்லூரிகளின் அதிகாரிகளும் வித்தியாசாலை அதிகாரிகளும் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.

## சிவநாம மகிமை.

[திருமங்கலம்
சிவப்பிரகாசசுவாமிகள்
அருளிச்செய்தது.]

கலிவிருத்தம்

புல்ல ராயினும் போதக ராயினும்
சொல்ல ராயிற் சுருதி விதித்திடும்
நல்ல வாகு நவையென் றகற்றிய
செல்ல றீருஞ் சிவசிவ வென்மினே.

இதன் பொருள்: *புல்லராயினும் - அறிவிற் குறைந்தவராயினும், போதகராயினும் - அறிவிற் சிறந்தவராயினும், சொல்வராயில் - "சிவ சிவ" என்று சொல்வார்களாயின், சுருதி விதித்திடும் - வேதங்கள் கூறுகின்ற, நல்ல ஆகும் - நன்மைகள் கைகூடும்; நவை என்று அகற்றிய - (அந்த வேதங்களினாலே) குற்றமென்று விலக்கப்பட்ட, செல்லல் தீரும் - தீமைகளெல்லாம் நீங்கிவிடும்; சிவசிவ என்மின் - (ஆதலினாலே) "சிவ சிவ" என்று சொல்லுங்கள் எ-று.*

*அறிவிலாராயினும் அறிவுளோராயினும் சிவநாமத்தை உச்சரிப்பாரேல் எல்லா நன்மைகளையும் அடைவர்; தீமைகளெல்லாம் அவரைவிட்டகன்று விடும் என்பதாம்.*

*சிவநாமத்தைச் சொல்வார்க்கு எவ்வகை யிடையூறும் நேராவென்பது "சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க் — கபாயமொருநாளுமில்லை" என்னும் ஔவையார் வாக்கானுமினிது விளங்கும். (உ)*

## தலையாய பெருங் கடன்.

(முற்றொடர்.)

*எமது இன்றியமையாப் பெருங் கடனாகிய சமயதீக்ஷையைத் தக்ககாலத்தில் குருமுகமாகப்பெற்றுக் கிரமமாக அனுட்டித்துவர அது இம்மை மறுமைஇன்பங்களைத் தப்பாது கொடுக்குமென்பதைப் பெரும்பான்மையானோர் உணர்ந்துகொள்வதில்லை. எமது சமய குரவர் "கற்றுணைப் பூட்டியோர் கடலுட்பாய்ச்சினும், நற்றுணையாவது நமச்சிவாயவே" என்றும், "திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராயின்" என்றும், "நீலைப்பெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா நித்தலுமெம்பிரானுடைய கோயில்புக்கு" என்றும், "புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டு" என்றும், இன்னோரன்ன பிறவும் பன்முறை பறைபறைந்தும் அவையெல்லாம் செவிகளிற் புகுந்தில. எமது சமயக்கொள்கைகளுக்கு நேர்விரோதமானவர்களாகிய மேனாட்டார் எமது நாட்டில் விதைத்த நவீன நாகரிகம் விபரீதக்கொள்கை என்னுங் கொடிய விருட்சங்கள் வானுறவோங்கிப் படர்ந்த கிளைகளைப் பரப்பின. அவற்றை நம்மவர்கள் கண்ணியத்துடன் அங்கீகரிக்கத் தொடங்கியமையினாலேயே எமது சமயாசாரம் குன்றிவருகின்றது.*

*சமயதீக்ஷைபெற்று அதனாற் பெரும் பேறடைய மனங்கொள்ளாத நம்மவர்கள் சைவசமயிகளெனச் சொல்லிக்கொள்ளுவதாற் பயனென்? பிறந்ததாற் பயனென்? வீணே திரிவதாற் பயனென்? சூரியன் உதியாதகாறும் இருள் நீங்காதிருப்பது போல ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை அறியாதகாலமெல்லாம் ஜனன மரணம் விடாது தொடரும். வேதங்களும் உபநிடதங்களும் ஆகமங்களும் மெய்யடியார் சரிதங்களும் பிறவும் ஸ்ரீபஞ்சாட்சரத்தையே விதந்து போற்றும். இப்பஞ்சாட்சரமே முத்திப்பேற்றுக்கு அருந்துணை; இருவினைக்காட்டைச் சுட்டெரிக்கும் ஞானாக்கினி. இம் மகாமந்திர மகிமையை ஓர் சரித்திரவாயிலாகச் சிறிது கூறுதும்.*

*நான்மாடக்கூடலாகிய மதுராபுரியிலே எதுகுலபாண்டியன்மரபில் வந்த தசாருகன் என்னும் அரசன் ஒருவனுளன். அவன் தன்குலம்புரி தவத்தினால் ஆங்கு இனிது செங்கோலோச்சிவந்தனன். ஆயினும் அவன் முன்செய்துகொண்ட தீவினைப்பயனாகப் பஞ்சாட்சர உபதேசமில்லாதவனாயிருந்தனன். இவ்வரசன் உரிய காலத்திலே ஓர் கன்னிகையை விவாகஞ் செய்தான். மணமகன் அப்பெண்ணைச் சமீபித்தலும் அவளது தேகத்திலிருந்து உஷ்ணம் வீசியது. அப்பொழுது அரசி தன் நாயகனைப் பார்த்து "அரசே, தாங்கள் என்னை விதிப்படி விவாகஞ்செய்தீர்களாயினும் தங்கள்கருத்து எனக்கு உடன்பாடன்று" என்றனள். தசாருகன் அவ்வார்த்தையைப் பொருட்படுத்தாது அவளது கையை வலிந்து பற்றினன். அப்பொழுது அவளது தேகத்திலிருந்து உலைமுகத்தில் அக்கினி எழுவது போன்று கொடிய நெருப்புண்டாகி அவனைக் கருக்கியது. அரசன் மார்பிற் பூசியுள்ள சந்தனம் பொரிந்து உதிர்ந்தது; மன்றன்மாலை கருகியது; முத்தாரம் நீறாகியது. அரசன் அதிகவருத்தமுற்றுப் "பெண்ணே, இந்த அக்கினி உன்னுடைய தேகத்திலிருந்து வந்த காரணம் என்ன" என்றான். அப்பொழுது அந்த மணமகள் புன்முறுவல் செய்து "பிராணநாதா, ஆணவமல இருளை மாறுத்துப் பரிசுத்தராகவிளங்கும் துருவாசமுனிவர் சிவசொரூபமாக விளங்கும் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை முன்னொருநாள் அடியாளுக்கு உபதேசஞ் செய்தருளினார். அதனால் என்னிடத்துள்ள இருவினைகளும் நீங்கின. நானும் பரிசுத்தமுள்ளவளானேன். தாங்கள் இன்னமும் அந்த மகாமந்திர உபதேசத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. தங்கள் தேகம் பாவம் நிறைந்ததாக விருக்கிறது. புண்ணியம் பாவத்தைச் சேராதவாறுபோல அடியாளும் தங்களைச் சேர்வதற்கு இப்பொழுது உரியளல்லள். எனவே தாங்கள் காலதாமதமின்றிச் சிவபஞ்சாட்சர உபதேசம் பெறல்வேண்டும்" என்றனள்.*

*அங்கு நிகழ்ந்த சம்பவமும் அரசி கூறிய வார்த்தைகளும் தசாருகனுடைய உள்ளத்தை ஊடுருவின. அவன் சிறிது வேளை அயர்ந்து அறிவு தெளிந்தபின் மனைவியை நோக்கி "அத்துணை மகத்துவம் பொருந்திய மகா மந்திரத்தை நீயே இப்பொழுது எனக்கு உபதேசஞ் செய்தல்வேண்டும்" என்றான். "அரசே, நாயகியிடம் நாயகன் உபதேசம் பெற்றுக்கொள்ளும் முறைமை தவறானதாகும். யமுனை நதிதீரத்திலே கர்க்கமுனிவர் எழுந்தருளியிருக்கின்றார். அவரிடம்போவேம் வாருங்கள்" என்று அப்பெண் கூறினள். இருவரும் அங்கிருந்து புறப்பட்டு யமுனைநதியோரமாகச் சென்று கர்க்கமுனிவரையடைந்து அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கியபின் தங்கள் பெருங் குறையை முறையிட்டார்கள். முனிவரும் அவர்களது நிலையை உணர்ந்து, அரசனுக்கு விதிப்படி உபதேசிக்கவேண்டி, தமது கரத்தை அரசனுடைய தலைமேல் வைத்து அவனது செவியில் மெய்ப்பொருளாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உபதேசித்தனர். அப்பொழுது அவனிடத்துள்ள தீவினைகள் எல்லாம் அவனது மயிர்க்கால்களிலிருந்து புறப்பட்டு, கோடிக்கணக்கான கரிய காக்கைகளின் உருவைப் பெற்றுப் பறந்து கரிந்தன. முனிவர் அரசனை நோக்கி "மன்னனே, நீ இதுகாறும் புல்லாயும் பூடாயும் புழுவாயும் மரமாயும் பாம்பாயும் பறவையாயும் கல்லாயும் மனிதராயும் பிறந்து உழன்று அலைந்தாய். இச்சென்மத்தினாற்றான் உனக்கு நற்பேறு கிடைத்தது. நீ இப்பொழுது பெறற்கரிய பிறவியைப்பெற்று அப்பிறவியிலே பெறற்கரிய பேற்றையும் பெற்றாய். இப்பஞ்சாட்சர உபதேசத்தினால் உன்னிடத்துள்ள வினைகள் எல்லாம் காக்கைகளாகப் பறந்து கரிந்தமையை நீயே கண்டனை. இம்மகாமந்திரத்தை உனக்கு இப்பொழுது உபதேசிக்கும் பாக்கியத்தை நான் பெற்றேனன்றி, அதன் மகத்துவத்தில் ஒருசிறிதும் யான் அறியேன்; தேவரும் அறியார்; மூவரும் அறியார்; மற்றேவரும் அறியார். இம்மந்திரப் பெரும்பேறு இம்மையில் உனக்கெய்தியது. நீ உன் மனைவியுடன் உனது நகருக்குச் சென்று பல்லாண்டு இனிது வாழுதி. ஈற்றில் திருவருட்பேற்றுக் குரியை ஆகுவை" என ஆசீர்வதித்து அனுப்பினர். அரசனும் தேவியும் தமது நகரத்தை அடைந்து பதினறு பேறும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்து சிவலோக வாழ்க்கை எய்தினர்.*

*இத் தசாருகன் சரிதமும் வேதங்களும் ஆகமங்களும் பிறவும் ஸ்ரீ பஞ்சாட்சரத்தையே விதந்து போற்றுகின்றன. எமது சமயகுரவராகிய திருநாவுக்கரசுநாயனார் "நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே" என்றும், "பண்ணிய உலகினிற் பயின்ற பாவதநை, நண்ணினின் றறுப்பது நமச்சிவாயவே" என்றும், "நடுக்கத்தைக்கெடுப்பது நமச்சிவாயவே" என்றும், "நங்களுக் கருங்கலம் நமச்சிவாயவே" என்றும், "நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே" என்றும், "நல்லக விளக்கது நமச்சிவாயவே" என்றும், "முன்னெறியாகிய முதல்வன் முக்கணன், தன்னெறியே சரணாதல் திண்ணமே, அந்நெறியே சென்றடைந்தவர்க்கெலாம், நன்னெறியாவது நமச்சிவாயவே" என்றும் அருளிச்செய்தனர். மாணிக்கவாசகசுவாமிகளும் "இனியென்னே உய்யுமாறென்றென் றெண்ணி ஐந்தெழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை, முன்னவனே முதலந்த மில்லாமல்லற் கரைகாட்டியாட்கொண்டாய் மூர்க்கனேற்கே" எனவும் அருளிச் செய்தனர் எனவே "குலந்தரும்—நீதிமிக்க குணந் தரும்—வேதம் சொல்லும் பலந்தரும்—உயர்ந்த சாயுச்சியந் தரும்—பழுதிலாத தலந்தரும்—எல்லாம் வல்ல ஜபந்தரும்—நிறைந்த செல்வ நலந் தரும்" ஸ்ரீ பஞ்சாட்சரத்தை நாம் ஒவ்வொருவரும் முறைப்படி உபதேசிக்கப்பெற்று அதனைத் தக்கவாறு ஜெபித்து வருதல்வேண்டும். "தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்" என்றபடி இதுவே ஈடேற்றங் கருதிச் செய்யவேண்டிய கருமமாகும். எமது தலையாய பெருங் கடனும் இதுவே.*

## வடமாகாண வித்தியாவிருத்தி

இலங்கையில் மேல்மாகாணமே அதிகமான பள்ளிக்கூடங்களை யுடையது. வடமாகாணம் அதற்கு இரண்டாவதாயுள்ளது. வடமாகாணத்துள்ள பதினறு பாடசாலைகள் நடைபெறுது ஒழிக்கப்பட்டும், அரசினர் உதவி நன்கொடைப் பணம் பெறும் 414 பள்ளிக்கூடங்கள் இப்பொழுது இருக்கின்றன. அரசினரால் நடாத்தப்படும் பாடசாலைகளின்தொகை ஏனைய மாகாணங்களைக்காட்டிலும் மிகக்குறைவு. இப்பொழுது 24 பாடசாலைகள் மாத்திரம் அரசினரால் நடாத்தப்படுகின்றன. அவற்றுள்ளும் மூன்று பாடசாலைகள் இவ்வருடமே ஆரம்பிக்கப்பட்டன. வடமாகாணம் முழுவதிலும் பள்ளிக்கூடங்களிற் கற்கும் பிள்ளைகளின் தொகை 48,189 இத்தொகையில் 1,469 பிள்ளைகள் அரசினர் பாடசாலைகளிற் கற்கின்றனர். அரசினர் உதவிபெறும் 414 பள்ளிக்கூடங்களில் 1924-ம் வருடம் மார்ச்சு மாசம் 31உ இடாப்பிலுள்ள பிள்ளைகளின் தொகை 45,242. இத்தொகையுள் 29,061 ஆண்பிள்ளைகள்; 16,181 பெண்பிள்ளைகள். முந்திய வருடத்தைக்காட்டிலும் இவ்வருடத்தில் பெண்பிள்ளைகளின் தொகை அதிகரித்திருக்கிறது.

பள்ளிக்கூடத் தொகையிலும் கற்கும் பிள்ளைகளின்தொகையிலும் வருடந்தோறும் அதிகரிக்கும் தொகையிலும் வடமாகாணமே மேல்மாகாணத்துக்கு இரண்டாவதாக வருகின்றது. மேல்மாகாணம் தென்மாகாணம் வடமேல்மாகாணம் என்னும் இவற்றைக்காட்டிலும் வடமாகாணத்துள்ள பெற்றோர் பிள்ளைகளுக்குக் கல்வி ஆவசியகமானதென்பதை உள்ளபடி உணருகின்றார்கள். சுதேசபாஷைக்கல்வியை ஒவ்வொருவரும் கட்டாயமாகக் கற்கவேண்டுமென 1916-ம் வருடம் ஒரு பிரமாணம் விதிக்கப்பட்டதாயினும் அதன் குடிசனத்தொகைக்குத்தக வடமாகாணத்திற் சுதேசபாஷை கற்கும் பிள்ளைகளின் விகிதம் மேல்மாகாணத்திலுள்ளதற்குச் சமமானதாகவிருக்கின்றது. அதாவது எட்டுக்கு ஒன்றாகும். இலங்கை முழுவதிலுமுள்ள குடிசனத்தொகையில் பதினொன்றுக்கு ஒன்று கல்விகற்கும் பிள்ளைகளின் விகிதமாகும்.

வடமாகாணத்திற் கல்வி கற்கும் 45,242 பிள்ளைகளுள் 44,413 பேர் இலங்கைத் தமிழர்; 422 மகமதியர்; 165 சிங்களவர்; 108 பறங்கி

யர்; 118 இந்திய தமிழர்; 11 மலாயர். சிங்களர் தொகை இதற்குமுந்திய வருடங்களைக்காட்டிலும் இருமடங்கு அதிகமாயது; இந்தியர் மகமதியர் என்னும் இவர்களுடைய தொகை சிறிது குறைந்தது. சமய விஷயமாகக்கூறில் சைவப்பிள்ளைகளுடைய தொகை அதிகரிக்கின்றது. அவர்களுடையதொகை 36,858. இரண்டாவதானவர்கள் கத்தோலிக்கர் அவர்களுடைய தொகை 6116. கிறீஸ்தபிள்ளைகளின் மொத்தத்தொகை 1804 இத்தொகை சிறிதாயினும் கிறீஸ்தசபை மாகாணம் முழுவதிலும் 100 பள்ளிக்கூடங்களைத் தன்கீழ்வைத்து நடத்துகின்றது.

இலங்கை முழுவதிலும் கல்விகற்கும் சைவப்பிள்ளைகளின்தொகை57,275,இவர்களுக்காக நூறுசைவப்பள்ளிக்கூடங்களே உள்ளன.

## வெள்ளாந்தெருப் பிள்ளையார் கோவில்.

வண்ணார்பண்ணை மேற்கில் வெள்ளாந்தெருப் பிள்ளையார் கோவிலென வழங்கிவரும் அங்குசபாசப் பிள்ளையார் கோவிலின் வரலாற்றையும் அதன் நிலைமையையும், இப்பொழுது அச்சிவ கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கும் ஒருவர் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் "அங்குசபாசப்பிள்ளையார் கோவில்" என்னும் மகுடமமைத்துடன் வெளியிட்டிருக்கின்றனர். இப்புராதன ஆலயம் சென்ற பத்துப்பன்னிரண்டு வருட காலமாக நித்திய நைமித்திகங்கள் நடைபெறுதலின்றிக் கிலமுற்று மிகவும் ஈனஸ்திதியிலிருந்தது. இவ்வாலய விஷயமாக இற்றைக்குச் சில வருடங்கட்கு முன்னர் இப்பத்திரிகையிற் சில வெளியிட்டுள்ளோம். ஒரு கிராமத்திலுள்ள ஆலயம் நித்திய நைமித்திகம் நடைபெறாது கிலமுற்றுக் கிடக்குமேல் அக்கிராமத்திலுள்ளார் ஒருபோதும் நன்கு வாழமாட்டாரென்பது சுருதியுக்தி அனுபவம் என்னும் மூன்றினாலும் அறியத்தக்கதாகும். இப்பொழுது புண்ணிய சிலர் சிலர் இவ்வாலயத்தைப் புதுக்குவித்துச் சம்புரோட்சன கும்பாபிடேகஞ் செய்வித்து நித்திய நைமித்திகங்கள் குறைவற நடைபெறுதற்கான முயற்சிகள் செய்துவருகின்றார்கள். விநாயகப் பெருமான் இவர்கள் மீது திருவருள் பாலிப்பாராக. இற்றை இவ்வாலயத்தைப் புதுக்குவதற்கான திருப்பணிச் செலவின் பொருட்டு வண்ணார்பண்ணையிலுள்ள சைவாபிமானிகள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்து, அடுத்த அட்சய வருடத்தில் விநாயகப் பெருமானுடைய நித்திய நைமித்திகங்கள் குறைவின்றி நடைபெறச் செய்து எங்கட்கு அவ்வருடத்தில் வரவிருக்கும் விக்கினங்களை அப்பெருமான் திருவருளால் நீக்கி இனிது வாழ முயலுதல் வேண்டும்.

## இந்திய இராசப் பிரதிநிதி.

றயிற் ஒனறேபிள் ஈ. எவ், எல் உவூட் அவர்கள் இந்திய இராசப் பிரதிநிதியாக நியமனம் பெற்றிருக்கின்றனர்.

## பவநகர் சமஸ்தானம்.

பவநகர் சமஸ்தானத்தார் தங்கள் எல்லைக்குள் சாராயம் உற்பத்தி செய்விக்கக்கூடாதென்றும், இறக்குமதி செய்யக்கூடாதென்றும் ஒரு சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

## வேற்றுமை விளைத்த சுவாமியார்.

ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் வேற்றுமை விளைக்கத்தக்க வியாசங்களை எழுதியதற்காக சுவாமி விசாரனந்த சரஸ்வதி டோரானியில் இரண்டு வருஷம் கடுங்காவற்றண்டனை அடைந்திருக்கிறார்.

## பதினொன்று பதினொன்று பதினொன்று.

கடந்த மகாயுத்த சமாதானம் நிறைவேற்றப்பட்ட பதினொராம்மாதம் பதினொராந்திகதி பதினொராம்மணித்தியாலம் இந்நவம்பர்மீ 11உ புதன்கிழமையாகும். அத்தினத்துக்குரிய கொண்டாட்டம் வழமைபோலக் கொண்டாடப்படும்

## உபநயனம்.

நிகழும் குரோதன வருஷம் ஐப்பசிமீ கஉ (29-10-25) வியாழக்கிழமை, நீர்வேலிக் கந்தசுவாமிகோயிற் குருக்கள் பிரமஸ்ரீ சு. சுவாமிநாதக்குருக்கள் அவர்களின் புத்திரர் குமாரசுவாமி சர்மாவுக்கு உபநயனம் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. அன்று முதலாக மூன்றுநாள் வரையுங் கொண்டாட்டமும் சென்ற சனிக்கிழமை பிற்பகல் ஊர்வலமும் நிகழ்ந்தன.

## இந்து மகமதிய கலகம்.

சென்ற புதன்கிழமை சொலாப்பூர் என்னுமிடத்திலே இந்துக்களுக்குரிய ஊர்வலம் ஒன்று நிகழ்ந்தபோது இந்துக்களுக்கும் மகமதியர்களுக்குமிடையில் ஓர் கலகம் நிகழ்ந்தது. பன்னிரண்டுபேர் கொல்லப்பட்டனர். அவர்களுள் இருவர் மகமதியர்.

## எமதுபிரதி தேசாதிபதி இரத்தினபுரியைத் தரிசித்தமை

எமதுபிரதி தேசாதிபதியாகிய மிஸ்டர் ஈ. பி. அலெக்ஷாண்டர் அவர்கள் வருகிற நவம்பர்மீ 8உ ஞாயிற்றுக்கிழமை இரத்தினபுரிக்குச் சென்று மறுதினம் களுகங்கைக்கு அக்கரையிலுள்ள உத்தியோகஸ்தானங்களைத் தரிசிப்பர்.

## தேசோபகாரிக்குச் சிறை.

இரங்கூனிலிருந்து வெளிவரும் தேசோபகாரியின் ஆசிரியராகிய திரு. சுப்பையா நாயுடு அவர்கள் தமது பத்திரிகையில் இராசத் துரோகமான இரு வியாசங்களைப் பிரசுரித்தாரென்ற குற்றச்சாட்டினால் ஒன்பது மாதக் கடூழியச் சிறையும் ஆறுமாத வெறுங்காவற் சிறையும் விதிக்கப்பெற்றனர்.

## அபினுண்டு இறந்தபிள்ளை

குருவித்தை என்னும் கிராமத்திலே கிராமவாசி ஒருவன் அபின் அருந்தியபின் எஞ்சிய அரைக்கிறும் அபினைத் தலையணையின்கீழ் வைத்து நித்திரையாயினன் அவனுடைய மனைவி தன் நான்கு வயதுக் குழந்தையை அவனுடைய படுக்கையில் விட்டபின் ஸ்நானம்செய்யச் சென்றனள். பிள்ளை தலையணையின் கீழுள்ள அபினை எடுத்து விழுங்கிச் சிறிது வேளையில் இறந்தது.

## களவும் கொலையும்

சென்ற ஜெனவரிமீ 28உ காங்கேனியாவிலே ஒரு கள்வர் கூட்டம் அங்குள்ள வீடொன்றினுட் புகுந்து ஒருவனைக் கொலைசெய்து திருடியவழக்கு, சென்றவாரம் காலிச் சுப்பிறீங்கோட்டிலே விசாரணை செய்யப்பட்டது. இவ்வழக்கிற் குற்றம் சாட்டப்பட்டோர் எழுவர். அவர்களுள் மூவர் மரணதண்டனை விதிக்கப்பெற்றனர். ஒருவனுக்கு ஒன்பதுமாதக் கடுஞ்சிறை விதிக்கப்பட்டது. ஏனையோர் விடுதலை பெற்றனர்.

## பரிதானம்.

வலகாமரஎன்னுமிடத்திலுள்ள ஆர்னேலிஸ் என்னும் ஒருவன் வேறொருவனை ஏமாற்றினனென்னும் குற்றச்சாட்டினால் அவன்மீது மாத்துறைப் பொலிஸ்நீதிபதியினால் விருந்து விடப்பட்டிருந்தது. குறித்த ஆர்னேலிஸ் அதனின்று தப்பும்பொருட்டு மாத்துறை உதவி ஏசன்றவர்களுக்கு 500 ரூபா பரிதானம் கொடுக்க முயன்றுனெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றனன். இவ்வழக்கு மாத்துறைப் பொலிஸ்கோட்டில் விசாரணை செய்யப்படுகின்றது

## எகிப்திற் கொலைகள்.

எகிப்தில் டண்டா என்னும் இடத்தில் நடந்த ஒரு பெரிய சந்தையில் ஒரு மந்திரிக்கு வழிவிலக்கி விடுவதில் குதிரைப் படைகள் செய்த கொடிய வேலையால் 54 பேர் மாண்டனர். 43 பேர் காயமடைந்தனர். மாண்டவர்களில் மாணவர் 24, சிறுமிகள் 9, ஆடவர்கள் 11, மாதர்கள் 10. சந்தைக்கு லட்சம் பேர் வந்திருந்தார்களாம் அதிகாரிகளுக்கு மரியாதை செய்ய விரும்பி, அளவிற்கு மிஞ்சி அதிகாரத்தைக் காட்டுவதால் ஏற்படும் தொல்லையைப் பாருங்கள். மக்களைக் காக்க வேண்டிய அரசு மக்களை மாய்க்கிறது. லோகோபகாரி கூறுகின்றது.

## கொழும்பு தமிழ்வேத பாராயணக் கழகம்.

தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலியனவற்றை இன்னிசைக் கருவிகளுடன் பாடுதற்குப் பயிற்றப்பட்டுவரும் இக்கழக மண்டபத்திலே, ஐப்பசிமீ 7உ சுக்கிரவாரந்தன்று மாலை 6 மணி தொடக்கம் 7மணிவரையிலும் பண்டிதர் பிரமஸ்ரீ சு. இரத்தினசாமி ஐயரவர்களால் ஸ்கந்தசஷ்டி விரதத்தின் மகிமையையும், அவ்விரதத்தைக் கிரமமாய் அனுட்டிக்கவேண்டிய முறையையும், அங்ஙனமனுட்டித்து, மோட்சசாம்பிராச்சியத்தை யடைந்தோரது பிராபவத்தையும் குறித்துச் சனங்களுடைய மனதிலே நன்றாய்ப் பதியும்வண்ணம் ஓர் சிறந்த பிரசங்கஞ் செய்யப்பட்டது. அதன்பின்னர் அக்கழகத்திலுள்ள மாணவர்களால் பக்கவாத்திய சகிதமாய்த் தமிழ்வேத பாராயணமும் நடைபெற்றது.

## காலஞ்சென்ற மாதவையா.

திரு அ மாதவையா திடீரென்று மாரடைப்பால் காலஞ் சென்றாரென்று கேள்வியுற்று வருந்துகின்றோம் புதிய தமிழ் வசன இலக்கியத்திற்காகப் பாடுபட்டு வருவோர் மிக மிகச் சிலரே யாவர். இவருள் நமது மாதவையாவும் ஒருவராவர். 'பத்மாவதி'யும் 'விஜயமார்த்தாண்ட'மும் இவரது வெண் புகழின் வாடா விளக்கங்கள் என்பது எமது கொள்கை' தமிழ்ப் பற்றேடு. இவர் ஆசாரச் சீர்திருத்தத்திலும் அளவிலா ஆர்வம் கொண்டவர். தமிழ் நாட்டிலே புதிய கலைஞானத்தை (ஸயன்ஸ்)ப் பரப்ப முயலும் 'தமிழர் நேசன்' என்னும் மாசிகையை முதலில் கண்டவர் இவரே. 'பஞ்சாமிர்தம்' என்னும் பத்திரிகையின் அதிபராக அமர்ந்து இவர் செய்த தொண்டு தமிழ் மக்கள் அறிந்ததேயாதும் இவர் திருப்பெயர் தமிழிலக்கியவரலாற்றில் இடம் பெறுமென்பது திண்ணம் —குமரன்.

## 1930-ல் சுயராஜ்யம்.

பவநகர் சமஸ்தானத்தைச்சேர்ந்த ஸ்ரீமாந் நரசிங்கபிரசாத் என்பவர் ஆபிரிக்காக் கண்டத்தில் சுற்றுப்பிரயாணஞ் செய்து சமீபத்தில் திரும்பியுள்ளார். ஆபிரிக்காவில் அவர் சந்தித்த ஐரோப்பிய தோட்டக்காரர் ஒருவர் சோதிடங் கூறுவதிற் பிரசித்தி பெற்றவராம். அவர் ஸ்ரீமாந் பிரசாத்தின் வாழ்க்கையில் சில அரிய நிகழ்ச்சிகளைக் கூறித் தமது சோதிடத்தில் நம்பிக்கை உண்டுபண்ணினாராம். அதன்மீது இந்தியாவுக்குச் சுயராஜ்யம் எப்போது கிடைக்குமென்று ஸ்ரீமாந் நரசிங்கபிரசாத் ஆவலுடன் வினவினார். அதற்கு அந்த ஐரோப்பியர் கூறிய பதில் அவரைத் திடுக்கிடச் செய்தது. 1930-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் நிச்சயமாய் இந்தியா சுயராஜ்யம் பெறுமென்றும், அப்போது மகாத்மா காந்தி தமது கோரிக்கை முற்றுபெற்றது கண்டு மகிழ்ச்சியுற்று, "ஓம், ஓம், ஓம்" என்று மூன்றுமுறை உச்சரித்துக் கடவுள் மூழ்கி விண்ணுலகுறுவார் என்றும் அவர் உறுதியாகக்கூறினாராம் இச்செய்தி "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையில் வெளியாயிருக்கிறது. இச்சோதிடத்தை நம்புவோர் நம்புக. மகாத்மாவின் முடிவைக் குறித்து இச்சோதிடர்கூறுவது இராமாயணத்தில் ஸ்ரீராமலட்சுமணாதியரின் முடிவை நமக்கு நினைவூட்டுகிறது என்று மட்டும் நாம் குறிப்பிட விரும்புகிறோமென்ற நவசக்தி கூறுகிறது.

## விநோத விபத்துக்கள்.

அலுத்துகாமாவுக்கும் கொழும்புக்கும் இடையில் ஓடும் மோட்டர்பஸ் ஒன்று சென்ற வியாழக்கிழமை காலை அதிக பிரயாணிகளுடன் கொழும்பிலிருந்து புறப்பட்டுக் களுத்துறைக்குச் சமீபமாக பகிரங்க வேலைப்பகுதிக்கு [illegible] கல்லேற்றிய பாரவண்டி ஒன்றைச் [illegible] வண்டிக்காரன் பஸ் வண்டிக்கு இடங்கொடாமையினால் பஸ் வண்டிச் சாரதி அந்தத் தெருவின் ஓரமாக மோட்டரைச் செலுத்தி மாட்டு வண்டியை முற்கொள்ளச் செலுத்தலும் அது ஒரு மதகுக்கு மேலாகச் சென்று பக்கத்துள்ள தோட்டத்தினுட் புகுந்தது. சாரதி அதனைப்பின் முன்னுக்குச் செலுத்தித் தெருவுக்குக் கொண்டுவர முயன்றபோது அது ஒரு வீட்டின் மேல் மோதிச் சேதப்படுத்தியது. அதன் பின் பஸ் வண்டி ஒருவாறு தெருவுக்குக் கொண்டுவரப்பட்டு சிறிது தூரம் சென்றவுடன் முன்னே நின்ற பஸ் வண்டி ஒன்றிலிருந்து இறங்கிய சிறுவன் ஒருவனை இடறியது. சாரதி சிறுவனைக் காப்பாற்றும்பொருட்டு முயன்றபோது பஸ்வண்டி பக்கத்துள்ள வேறொரு வீட்டை இடறிச் சுவரையும் வீழ்த்தி வேயப்பட்டுள்ள அநேகம் ஓடுகளையும் நொருக்கியது. அந்த வீட்டுக்காரர் தங்களுக்கு நேர்ந்தநஷ்டத்தைக்கொடுக்கும்படி பஸ் வண்டியைச் சூழ்ந்து சாரதியைக் கஷ்டப்படுத்தினார்கள். ஈற்றில் கிராமாதிபதி அங்குச் சென்று ஒருவாறு இருபகுதியாரையுஞ் சமாதானப்படுத்தினர்.

## வாணவிளையாட்டுப் பரிசு.

வாணவிளையாட்டில் திறமைவாய்ந்தோருக்கு பரிசு கொடுக்கும்பொருட்டுப் பாணந்துறைக்குச்சமீபமாயுள்ள பறக்காஸ்தோட்டைப் புத்தபாஞ்சாலையிலே சில நாட்களுக்கு முன் ஒரு இரவு ஆயிரக்கணக்கான சனங்கள் கூடினார்கள். வாணத்தொழிலில் கைதேர்ந்தவர்கள் எல்லோரும் பரிசுபெறும்பொருட்டு அதிக தொகையான வாணங்களுடன் அங்குச்சென்றார்கள். பாஞ்சாலையிலுள்ள புத்தகுரு சிறிது வேளை செபம்செய்தபின் நெருப்பு விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டது. எல்லோரும் பார்த்து ஆனந்தமடைந்தார்கள். வாணம் கட்டுவதில் திறமைவாய்ந்த ஒருவர் உருவத்தில் தேங்காய் போன்றிருந்த ஒரு வாணத்தைக்கொண்டுவந்து அதன் திரிக்கு நெருப்பு வைத்தபோது அது எவர்களும் திடுக்கிடும்படி உரத்தசத்தத்துடன் வெடித்தது. அவ்வாணத்துள்ளிருந்து கண்ணாடித் துண்டுகளும் வேறும்பலவித துண்டுகளும் புறப்பட்டு அங்குச் சூழ்ந்து நின்றோர் பலரைக்காயப்படுத்தியது. அவர்களுள் எழுவர் கடுங்காயமுற்றார்கள். படுகாயப்பட்டோர் எழுவரும் பொலீசரால் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். அவர்களுள் ஒருவர் சென்ற ஞாயிற்றுக்கிழமை இறந்தனர். ஒருபெண்ணின் கால் முறிந்தது. ஏனையோர் கடுங்காயப்பட்டும் சீவமோசமில்லையெனச் சொல்லப்படுகிறது. கண்ணாடித்துண்டுகளும் பிறபொருள்களும் வெடிமருந்தும், பொதியப்பெற்ற ஒரு பித்தளைக் குடம், கண்டோர் சந்தேகமுறுவண்ணமதேங்காய்க்குள்வைத்துக் கொண்டு வரப்பட்டதென்றும், வாணங்கட்டுவோர் சிலருக்கிடையிலுள்ள பழைய பகையைச் சாதிக்கும் பொருட்டு ஒருவரால் அந்த வெடி வாணம் கொணடுவரப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. பொலீசர் இதிற் சம்பந்தப்பட்டோரைப் பிடிக்க முயன்று வருகின்றனர்.

## திரிகோணமலை மாதர்ஐக்கியசங்கம்.

இச்சங்க ஆதரணையின் கீழ் 1925ஆ புரட்டாதிமீ 12உ ஸ்ரீ சண்முகவித்தியாலயத்தில் சனிக்கிழமை இரவு 6 மணிதொடக்கம் ஸ்ரீமத மயில்வாகனக் குருக்கள் அவர்களால் திருநீலகண்ட நாயனாருடைய சரித்திரம் உபந்நியாசிக்கப்பட்டது. பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரக்குருக்கள் அவர்கள் குறிப்புரை கூறினர்.

புரட்டாதிமீ 21உ திங்கட்கிழமை சாயந்தரம் 6 மணிதொடக்கம் ஸ்ரீமதி செ உருக்குமணியம்மாளின அக்கிராசனத்தின்கீழ் ஸ்ரீமதி தா. பொன்னம்மாளால் விபூதி என்னும் விஷயம் செந்தமிழ் நடையில் எழுதி வாசிக்கப்பட்டது. ஸ்ரீமத் வே. பரமேஸ்வரியம்மாவாலும் சபைத்தலைவியாலும் குறிப்புரை பகரப்பட்டது. ஸ்ரீமதி பரமபாக்கியம்மாள் ஸ்ரீமதி புவனேஸ்வரியம்மாள் ஸ்ரீமதி மனோன்மணியம்மாள் ஆதியோரால் தேவாரமோதப்பட்டது.

23உ புதன்கிழமை சுவாமிவிபுலாநந்த அவர்கள் தலைமையின்கீழ் சிதம்பரம் சுவாமி வேலாநந்த அவர்கள் "சிவபக்தி என்னும் விஷயமாக ஓர் அரிய பெரிய உபந்நியாசம் செய்தனர். திருவாளர் மா. சிதம்பரம்பிள்ளை பிரம்மஸ்ரீ கி கி இராமஸ்வாமி ஐயர் ஸ்ரீமதி தையல்நாயகியம்மாள் ஆதியோர் குறிப்புரை கூறினர்.

ஐப்பசிமீ 1உ வியாழக்கிழமைசாயந்தரம் 6 மணிதொடக்கம் பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்களின் தலைமையின்கீழ் ஸ்ரீ மாணிக்கத்தியாகராச பண்டிதர் அவர்கள் "மாமனாக வந்து வழக்குரைத்த திருவிளையாடலைப் பிரசங்கித்தனர். டை குருக்களும் ஸ்ரீமதி தையல்நாயகியம்மாளும் குறிப்புரை கூறினர். குருக்களின் புத்திரிகள் ஸ்ரீமதி புவனேஸ்பரியம்மா இரத்தினசவுந்தரியம்மா, காந்திமதியம்மா வாதியோர் தேவார மோதினர்.

14உ புதன்கிழமை சாயந்தரம் ஆறரைமணி தொடக்கம் பிரம்மஸ்ரீ இ கு. பூரணானந்தேஸ்வரக்குருக்கள் அவர்களால் பாண்டியன் சுரம் தீர்த்த திருவிளையாடல் பிரசங்கஞ் செய்யப்பட்டது. பாடசாலைச் சிறுமிகள் தேவாரமோதினர்.

கழித.

## ஏழு அபாயங்கள்.

(லஜபதிராயின் "பீபிள்" பத்திரிகையிலிருந்து)

நம்மவர்கள் விசேஷமாகப் பாராட்டும் எண்களில் ஏழு என்பதும் ஒன்றாகும். பேரறிஞர்களான முனிவர் எழுவர் (சப்த ரிஷிகள்). பெருங் கடல்கள் ஏழு (சப்த சமுத்திரம்). சூரிய பகவான் தேரை இழுத்துச் செல்லுங் குதிரைகள் ஏழு. இவ்வுத்தம ஜாதிக் குதிரைகளையே சூரிய ஒளியின் ஏழு நிறங்களாக மேற்புல அறிவு நூல் (ஸயன்ஸ்) கூறுகின்றது. இப்படிப்பட்ட பல பல 'ஏழு'களோடு அமெரிக்கர் புதிதாக 'ஏழு' ஒன்றையுஞ் சேர்க்கப் பார்க்கிறார்கள். அமெரிக்க மேதாவிகள் கூடி 'உலக சமாதான'த்தைப் பற்றி ஒரு விவகாரம் நடத்தினார்கள். இதன் பயனாக, உலக சமாதானத்தை நிலைகுலையச் செய்யும் ஏழு அபாயங்கள் இப்போது எதிர்ப்படுகின்றன என்ற முடிவு ஏற்பட்டு விட்டதாம். இத்தாலி தேசத்தில் ஜனத்தொகை அதிகரித்து வருவதால், இத்தாலி ஒரு அபாயமாம். ஆஸ்திரியா ஜர்மனியோடு சேர விரும்புவதால், ஆஸ்திரியா இன்னொரு ஆபத்தாம். சீனா 'வெள்ளையரது பேராசைக்கு நான் விருந்தாக மாட்டேன்!' என்று மறுப்பதால் சீனாவும் ஓர் ஆபத்தாய் விட்டதாம். அமெரிக்காவின் ஆசைக்கு இரையாக இணங்காததால் மெக்ஸிகோவும் ஓர் அபாயந்தான. இவ்விதமாக 'ஏழு அபாயங்கள்' கணக்கிடப்பட்டன. திசைகள் எட்டாதலால் அபாயங்களும் எட்டாதல் வேண்டுமென்றும், அமெரிக்காவே எட்டாவது அபாயமாகுமென்றும் அந்த விஜயம் செய்திருந்த ஓர் இந்திய அறிஞர் கருதினாராம். "உண்மைப் பொருள் ஒன்றே; அறிஞர் பலவாறாகக் கூறுகின்றனர்" என்பது வேதவாக்கு. அவ்வண்ணமே அமெரிக்க மேதாவிகள் பலவாகக் கூறும் அபாயப் பொருளும் உண்மையில் ஒன்றுதான். அதுதான், அறிஞர் விவகாரத்தில் விவரிக்கப்படவில்லை. இந்தியாவே உலக சமாதானத்தைக் கலைக்கும் 'அபாய'மாகும். இவ்வண்ணம் உண்மையாக உலக சமாதானத்தை நாடும் ஓர் ஆங்கில அறிஞர்—வெல்ஸ் என்பார்—அறிவிக்கின்றார். இந்தியாவின் தொண்டு நிலை இந்தியாவிற்கே மாத்திரம் அபாயமன்று; உலகத்திற்கே அபாயமாகும். ஆங்கில வல்லரசே சில உலகின் பெரும் பகுதியையும் இக்காளில் விழுங்கி வருகின்றது. இதற்குத் தொண்டுபட பொழுதும் இந்தியாவே அனுபுரிகின்றது. இக்கூத்து செலவு இரண்டு ஆற்றுண்டுகளாக நடைபெற்று வருகிறது. தன் ஏகாதிபத்திய மணி மகுடத்தில் விலையிலா மாணிக்கமாக மிளிரும் இந்தியாவை இழந்துவிடக் கூடுமென்ற கவலையினாலே தான், ஆங்கில ஏகாதிபத்தியம் எகிப்து தேசத்தொடு கோபல் பொன்றுகின்றது,' இன்னும் பல ஆபிரிக்க நாடுகளோடு ஆகிய நடுகளோடும் [illegible] ஐரோப்பிய நாடுகளில் பொருமை விதைகளை விதைக்கின்றது.

[இன்னும் "ஏழு" ஆகவுள்ள ஏழ் பிறப்பு ஏழு நாள் முதலியனவாம்.

பத்திராசிரியர்.

## திரிகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலய வருடாந்தக்கூட்டம்.

சென்ற ஐப்பசி 9ட (25-10-25) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் டிை வித்தியாலய மண்டபத்தில் ஓர் பெருஞ்சபை கூடப்பெற்றது. பல கல்விமான்களும் உத்தியோகஸ்தர்களும் பெண்மணிகளும் வித்தியாலயப் பெண்குழந்தைகள் ஆசிரியர்கள் மானேஜர் ஆகியாரு சகலருஞ் சமுகமாயினர். 5 மணி தொடக்கம் 6 மணிவரையில் சங்கீத பஜனை நடைபெற்றது. பின்னர் பிரக்டர் ஸ்ரீ கி.சிவலிங்கம்பிள்ளையவர்கள் அக்கிராசனத்தமரக் கூட்டம் ஆரம்பமாயது. ஸ்ரீமதி மகேஸ்பரியம்மாளால் தேவாரபாராயணஞ்செய்யப்பட்டது. இரண்டாவது வருட அறிக்கைப்பத்திரம் ஸ்ரீ க. கைலாசபிள்ளை உபாத்தியாயரால் வாசிக்கப்பெற்றது. பின்னர் பாடசாலைச் சிறுமிகள் பல பிரிவினராக வந்து தேவாரம் திருப்புகழ் முதலாம் அருட்பாக்களைச் சபையிற் பாடினர். யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருடைய பாலபாடங்களில் உள்ள; "சைவ வித்தியாசாலை, தந்தை தாய்பேண், பாரதத்திலுள்ள சில நீதிவாக்கியங்கள், ஆலயம், கடவுள் என்னும் பாடங்கள் பிள்ளைகளால் மனனமாகச்சபையிற்" பேசப்பட்டன. பெண்பிள்ளைகள் கற்கவேண்டிய கல்வியெது என்பதையிட்டு ஓர் சம்பாஷணைப்பாடம் பிள்ளைகளால் வெளிவரப்பெற்றது. அதன்பின்பு "இராமகிருஷ்ண விஜயம்" பத்திராதிபர் பிரம்மஸ்ரீ கி. சி. இராமஸ்வாமி ஐயர் அவர்களால் ஓர் சிறந்த உபந்நியாசம் நிகழ்த்தப்பெற்றது. பின்பு திருவாளர் மா. சிதம்பரப்பிள்ளை அவர்களால் ஓர் சிறந்த சொற்பொழிவும் பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் அவர்களால் குறிப்புரையும் சபையோர் ஆனந்தமடைய வெளிவரலாயின. சபாநாயகர் அவர்கள் முடிவுரையின்பின் ஆசிரியர் ஸ்ரீ க. கைலாசபிள்ளை அவர்கள் சபாநாயகர்க்கும் சபையோர்க்கும் வந்தனங்கூற ஒன்பது மணியளவில் கூட்டம் முடிவு பெற்றது. சந்தனம் பன்னீர் முதலியவைகளால் சபையோர்க்கு உபசாரணை நடைபெற்றது.

கடித.

## ஸ்ரீ அங்குசபாசப் பிள்ளையார் கோவில்.

இற்றைக்குப் பலவாண்டுகளின் முன்னரே வெள்ளாந்தெருவிலே ஸ்தாபிக்கப்பட்ட இப்புராதன ஆலயம் சென்ற 10, 12, வருடங்களாகப் பூசையின்றிக் கிலமாகக்கிடந்தமையை யாவரும் அறிவார்கள்.

இக்கோவிலிருந்த காணியிலேயே பிரம்மஸ்ரீ. சண்முகக்குருக்கள் என்பவருடைய சந்ததியாரும் தமது சொந்தமான வீட்டில் வசித்து, கோவிற்பூசையையும் செய்து அயலோர் ...ம் புரோகிதத்தையும் பார்த்துவந்தனர்.

இச்சந்ததியார் வரவரக் குன்றிப்போகவும், எஞ்சியவர்கள் ஆங்கிலேயக்கல்வி பயின்று அரசாட்சி உத்தியோகத்தைபேதேடவும் மிகுதிப்பட்டோர் பெண்பாலாராகவேயிருக்கின்றனர். இப்பெண்களிலொருவரை மணம்முடித்த, பிரம்மஸ்ரீ. சிவ. சுப்பிரமணிய ஐயரவர்கள், சிறிது காலம் இக்கோவிற் பூசையை ஒருவாறு நடத்திவந்து, அவருக்கு கொழும்பு செட்டித்தெருப்பிள்ளையார் கோவிற்பூசையமனமாக அங்குச்சென்றனர் ஆகவேசென்ற 10 வருடமாகப் பூசை முதலியனவின்றி மண்டபம் நிரம்ப மரச்சாமான்களடைக்கப்பெற்று கதவு பூட்டப்பட்டு இக்கோவில் இருந்தது. கோவில் வளவு தெருப்போக்கர்களுக்கு மலசலம் கழிக்குமிடமாகவமைந்திருந்தது.

இற்றைக்குச் சில நாட்களுக்கு முன் பிரம்மஸ்ரீ ஈா. இராமசாமிஐயர் (விஷவைத்தியரும் மந்திரவாதியும்) இக்கோவிலுக்கடுத்த கிருகத்திற் குடியிருக்கநேர்ந்தது. அவர் இக்கோவிலின் சுதீனதசையைபெடுத்து அயலவர்கட்குச்சொல்லி, அர்ச்சகரின்றி அங்கலாய்த்து நின்ற அயலவர்களின் பெருமுதவியைக்கொண்டு டிை சுப்பிரமணிய ஐயரின் சம்மதத்துடன், கோவிலைத் திருத்தியும் மடப்பள்ளியமைத்தும் இன்னும் பலதிருத்தங்களையுண்டாக்கியும் வேலை நடப்பித்து வருகின்றனர் கூடிய சீக்கிரத்தில் நித்திய பூசை நடக்குமென நம்புகின்றோம்.

இப்புண்ணியத்தில் ஈடுபட்டு இராசவாசல் முதலியார் ஸ்ரீ ம. சி இராமலிங்கம் அவர்களும், ஸ்ரீ. மா. சண்முகமவர்களும் இஞ்சினீர்) இன்னும் அவ்வயலிலுள்ளவர்கள் சகலரும் பொருளுபகரித்திருக்கின்றனர் எனவறியலானோம். ஸ்ரீ கை இராமநாதனவர்கள் டிை சுப்பிரமணிய ஐயரவர்களிடம் இக்கோவிற் திறவுகோலைப்பெற்று, கோவிலைத் திறந்து விட்டுத்தமது ஊக்கத்தையும் பிரயாசையையும் செலவுசெய்கின்றனர்

கிலமாகவிருக்கும் ஒருகோவிலைப் புதுக்குவித்தல்புதிதாக ஆயிரம் கோவில்கட்டுவித்த பலனைக் கொடுக்குமென்பது ஆன்றவாக்கியம்:

தருமசீலர்கள் இப்புண்ணியத்தையிடையே சோரவிடாது விசுவிநேஸ்வரப்பெருமானுக்குப் பூசை முதலியன நடக்கும்வண்ணம் ஏற்பாடு பண்ணிவைத்து அப்பெருமானுரின் வற்றுப்பெருங்கருணைக் காளாவர்களாக,

சடித.

## ஒற்றுமை.

(வண்ணார்பண்ணை ஸ்ரீமதி. க. நவரத்தின அம்மாள் எழுதியது)

அன்பார்ந்த சகோதரிகாள்,

ஒத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம் என்னும் முதுமொழிப்படி நாம் ஒவ்வொருவரும் ஒருவரோடொருவர் ஒற்றுமையாக இருத்தல் வேண்டும். இதுவே மானுடராகிய எங்கட்கு இன்றியமையாததாம். நாம் ஒருவரோடொருவர் ஒற்றுமையில்லாததினாலேயே, இக்காலம் கேவலமான நிலைமையிலிருக்கிறோம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெற்றென விளங்கக் கிடக்கின்றது. மேலைத்தேசவாசிகள் தங்கள் ஒற்றுமையினாலேயே உயர்பதவியடைந்திருக்கின்றனர். நாமும் ஏன் ஒருவரோடொருவர் ஒற்றுமையாக இருந்து உயர்பதவியடைதலாகாது?

'அழிவதூஉம் ஆவதூஉம் ஆகிவழிபயக்கும் ஊதியமுஞ் சூழ்ந்து செயல்.'

என்பதை நாம் ஒவ்வொருவரும் நம்மனதிற்கொண்டு நடத்தல் வேண்டும். எவ்வித காரியத்திலும் ஒருவரோடொருவர் வேற்றுமைப்படலாகாது. மற்றவர்களுடைய அபிப்பிராயம் நமக்குப் பிடியாதிருந்தால், அது எதனால் நமக்குப் பிடிக்கவில்லை என ஆராய்ந்து பார்த்து, அதன் குற்றங் குறைகளை மற்றவர்களிடம் சிநேகபாவமாகக் கூறித் தடுத்தல் வேண்டும். அதனை விடுத்துக் கடுகடுத்துக் கூறிச் சினந்தால் ஒற்றுமைக்கழிவுண்டாகும். சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை யெனக் கூறியிருப்பதால் நமக்கு ஒற்றுமை மிகவும் அவசியகமே. ஒன்று சேர்ந்து வாழ்வதால் இம்மையிற் புகழும் மறுமையிற் புண்ணியத்தையும் அடைவோம்.

"நற்குணமரைக் கயந்து நல்லன்னம் சேர்ந்தாற் போற், கற்றாரைக்கற்றாரே காமுறுவர்—கற்பிலா, மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற், காக்கை யுகக்கும் பிணம்."

ஒரேவிதமான தொழில் உடையவர்களிடமே ஒற்றுமை நிலைக்கும். எவ்விதமெனில் கள்வனொருவனிருக்கிறான் அவனுடன் நற்குணமுடையோன் சேர்ந்தால் அவனது எண்ணத்திற்குப் பங்கம் நேரிடும். அவனுடன் பல கள்வர் கூடுவாராகில் அவனது வேலை எளிதில் நிறைவேறும். ஆதலால் எப்படிப்பட்டவர்களுக்கும் ஒற்றுமை பயனளிக்கும்.

ஒருவன் தனித்தொரு வேலை செய்வதைப் பார்க்கிலும், பலபேர் கூடிச் செய்தால் விசேஷமாயிருக்கும். ஒருவனுடைய எண்ணத்திலும் பலபேரின் எண்ணம் சிறந்தது.

"அற்றகுளத்தினறு நீர்ப்பறவைபோ லுற்றுழித்தீர் வாருறவல்லர்—அக்குளத்திற் கொட்டியுமாம்பலு நெய்தலும் போலவே ஒட்டியுறுவாருறவு;

என முன்னோர் கூறியபடி, ஒருவனுக்கு எவ்வித ஆபத்து நேர்ந்தபோதும் கூடவேயிருந்து அனுபவிப்பதே ஒற்றுமையியல்பாம். இந்நாட்களிலோ நம்மவருள் அனேகரிடம் ஒற்றுமை யென்பது ஒருசிறிதுமில்லை. பெற்றோர்கள் பிள்ளைகளிடமும், பிள்ளைகள் பெற்றோர்களிடமும் ஒற்றுமை பாராட்டுவதில்லையென்றால், மற்றவர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? ஒரு வண்டியை இரண்டெருதுகள் எவ்விதம் இழுக்கின்றனவோ, அவ்வித ஒற்றுமை தானும் நம்மிடமில்லையே. காகமானது இரை கண்டவிடத்தில் தான் தனியே உண்ணாது தனது சுற்றத்தாரையும் கா, கா வெனக் கூவியழைத்துக் கூட்டியுண்பதை, பெரும்பான்மையும் நாம் ஒவ்வொருவரும் கண்டிருக்கிறோம். அறிவில்லாப் பறவைகள் இவ்விதம் ஒற்றுமையாயிருக்கக் கேவலம் ஆறறிவுடைய மானுடர்களாகிய நாம் ஒருவரோடொருவர் ஒற்றுமையின்றி வேற்றுமைப் படல் அழகாகுமா?

ஆதலால் சகோதரிகளே, நாம் ஒவ்வொருவரும் ஒற்றுமையாயிருத்தல்வேண்டும். அவ்விதமிருப்போமாகில் நமக்கு நேரும் இன்னல்களும் சிறிது குறைவாகவிருக்கும். நமது இக்காலத்திய கேவல நிலைமைக்குக் காரணம் ஒற்றுமையின்மையே. நாம் ஒவ்வொருவரும் ஒருவரோடொருவர் ஒற்றுமையாக இருப்போமாகில் நம்மை எதிர்ப்பவர் யார்? இனிமேலாவது நாம், 'ஒத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்' என்பதை எண்ணி நடப்பதற்கு, எங்கும் நிறைந்து விளங்காநிற்கும் சச்சிதானந்தப் பரம்பொருள் திருவருள் புரிவாராக.

## அடைவுநகைவிற்பனவு விளம்பரம்.

———:O:———

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண் கிழக்கு செ. நா. செ. சாமிநாதன் செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டிை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924ஆ செப்டம்பர்மீ

| நம். | திகதி | ரூபா | ஊர் ... | நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|
| 4540 | 16 | 60 | மானிப்பாய் சிதம்பரி ...னத்தம்பி | பொன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 4541 | 16 | 50 | அச்செழு வயிரமுத்து கந்தையா | பொன் கம்பிப்பூரானட்டில் 1 |
| 4554 | 17 | 45 | கொழும்புத்துறை ச...சிவம் குமாரசாமி | பொன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 4570 | 21 | 90 | அனலைதீவு கதிரேச வேலாயுதர் | பொன் கம்பிப்பூரானட்டியல் 2 |
| 4576 | 22 | 70 | கைதடி வேலுப்பிள்ளை இளையதம்பி | பொன் சங்கிலி அட்டியல் 1 |
| 4593 | 26 | 80 | சுளிபுரம் முத்துக்குமாரசூரியர் குமாரசூரியர் | அமெரிக்கன் 2 பவுன்கொண்டலர் கோர்த்தசங்கிலி 1 நீலக்கல்மோதிரம் 1 |
| 4598 | 27 | 33 | வண்மேற்கு சிற்றம்பலம் கந்தையா | பொன் கெட்டிக்கொலிசுக்காப்புச் சோ.1 |
| 4605 | 29 | 18 | சிறுப்பிட்டி குட்டியர் சின்னத்தம்பி அச்சோபர்மீ. | பொன் குவளைக்கடுக்கன் சோடி 1 குதிரைமுழுத்தங்கப்பவுண் 1 |
| 4607 | 2 | 70 | வண்மேற்கு சுப்பிரமணியம் சம்பந்தர் | பொன் அவல்மாலை 1 |
| 4617 | 4 | 40 | வேலணைமேற்கு வீரபத்திரர் கதிர்காமர் | பொன் முகப்பில்லாத கம்பிப் பூரானட்டியல் 1 |
| 4618 | 4 | 40 | சோனகதெரு மீராசாகிபு பக்கிரி முகைதீன் | பொன் சவடிக்கொடி 1 |
| 4637 | 8 | 90 | கரையூர் தேவசகாயம்பிள்ளை கைம்பெண்விக்டோரியா | பொன் குண்டுச்சங்கிலி 1 |
| 4645 | 11 | 145 | சிறும்பியடி வேலுப்பிள்ளை அமரசிங்கம் | பதைக்கத்துடன் செட்டிப்பூரானட்டியல் 1 காப்பு முகப்புச் சோடி 1 |
| 4657 | 11 | 60 | தட்டாதெரு வயிரமுத்து சிதம்பரநாதர் | பொன் கொலிசுக்காப்புச்சோடி 1 |
| 4669 | 13 | 25 | சுண்டிக்குளி சந்தியாப்பிள்ளை சவுரிமுத்து | பொன் மோதிரம் 1 |
| 4672 | 14 | 15 | வேலணை இராமுப்பிள்ளை நடராசா | பொன் மோதிரம் 1 |

விற்பனவு:—குரோதனஆ ஐப்பசிமீ 29ட (14-11-25) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை புறநீங்கலாக மிகுதி டிை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெர்திஸ்மேஸ்தர்.

(Mis 739)


## அதிசிரேஷ்டமான தைலம்.


காரகண்டிப்பான மனுஷனோ ஸ்திரீயோ சரியென மதிக்கும்படியான அநேக முக்கிய சரக்குகள் சேர்ந்த தைலம்

### லிட்டில்ஸ் ஓரியன்றல் பாம்.

இதர தைலங்களைவிட இது ஏன் சிரேஷ்டம்?

1. நோவைக் குணமாக்கும் 12 திவ்விய சரக்குகள் சேர்ந்தது.
2. அவைகளின் சாரத்தை அது தன் இட—திரவ மூல காரணத்திலடக்கி வைத்திருக்கிறது.
3. அதில் வீணாய்ப்போகும் தன்மையே கிடையாது. தினையளவு தைலம் பனையளவு குணத்தைத்தரும்.
4. அதில் அன்னியபொருள் சேர்ப்பில்லை.
5. அதில் மிருகக்கொழுப்பேயில்லை.
6. அது குணஞ்செய்யும் குணமுடையது.

L—25.




(Y. 41, c.)

## ஹிஸ்டீரியா என்னும் மூர்ச்சைவியாதி நிவர்த்தியாயிற்று

என்று திருவாலைக்காவல் சீதாராமய்யரவர்கள் பின்வருமாறு சென்னைக் கேஸரி குடீரம் கம்பனியாருக்கு எழுதினர்.

4-வருஷகாலமாய் அடிக்கடி (பஹிஷ்டைகாலத்தில் வரும் ஹிஸ்டீரியா) மூர்ச்சைவியாதியால் வெகு ஆபத்தாய்ப்படுத்திருந்த என் பாரியாளுக்கு உடம்பிடமிருந்து தருவித்த "லோத்ராஸ்"னுபயோகத்தால் சம்பூரணகுண முண்டாயிற்று.

"கேஸரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.

(Y. 35. A)

## சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் நெய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியுங் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுனபேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லீஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:

கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அன்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம், S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.

(H. 32)

## புதிய தினுசுகள் சகாய விலைகள் நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னாடு, காஞ்சிபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் உத்தமமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வீ. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

Y. 39).

## ஆப்ரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய்விட்டது.

கேஸரியின் விலையுயர்ந்த ஔஷதங்களின் குணத்தை மிகவும் மெச்சினேன் 'லோத்ரா' வைப்பற்றி என அனுபவத்தைக்கீழேகுறிப்பிடுகின்றேன். அதற்குச்சமமான ஔஷதம் பூலோகத்தில் வேறெதுவுமில்லையெனத்திண்ணமாய்க் கூறுவேன். என்மனைவிக்கு வயிற்றில் இடதுபாகத்தில் ஒருவிதமான வலி இருந்து வந்தது மேனாட்டு (இங்கிலீஷ்) வைத்தியம் எல்லாம் பிரயத்தனப்பட்டுக்கு ணமடையவில்லை. பின் ராஜமந்திரி ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போனதில் உடனே கர்ப்பபையில் சாஸ்திர சிகிச்சைசெய்யவேண்டு மென்றார்கள். இது என் மனைவிக்குச் சம்மதமில்லாததால் பெருங்கஷ்டத்துடன் ஊர் வந்தசேரும் தருணத்தில் வரப்பிரசாதிபோல் "லோத்ரா" ஞாபகத்திற்கு வந்ததால் சென்னைக்கு ஆபரேஷனுக்கு வருமுன் இதை உபயோகித்துப் பார்க்க எண்ணங் கொண்டவனாய் தந்தி மூலமாய் ஆடர் கொடுத்து ஔஷதத்தை தருவித்துக்கொண்டு முதல்வேளை மருந்து கொடுத்த மாத்திரத்திலேயே குணம் காண ஆரம்பித்தது, இரண்டாம் வேளை மருந்து கொடுத்தவுடன் 8-மணிநேரம் நல்ல நித்திரைசெய்தாள். மறுபடி மூன்றும்வேளை மருந்து மறுநாள் கொடுத்தமாத்திரத்தில் வலியெல்லாம் நின்றுவிட்டது. நாளுக்கு நாள் சுகமடைந்து வந்தாள். சத்தியமாய் "லோத்திரா" வினால் ஆபரேஷனின் தான் நிவர்த்தியாக வேணுமென்று இங்கிலீஷ் டாக்டர்கள் சொன்னவ்யாதி ஆபரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய் விட்டது என்று காக்கினாட, கோதாவரி டிஸ்டிரிக்டு போர்ட் இஞ்சினியர் ஆபீஸ், மகா-ா-ா-ஸ்ரீ பி. சுப்பராயுடு அவர்கள் எழுதுகிறார்.

இந்த ஔஷதத்தைப் பற்றிய புத்தகத்திற்கு உடனே எழுதுங்கள்.

"கேசரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.

(Y. 35. B.)


வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna,